காமராஜர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய சிவகாசி போன்ற தொழில் நகரங்களில், தொழில் கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள் ஏதாவது தொழில் கூடங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டு அமைச்சர் அவர்களை அணுகினால்—அவர்கள் அருப்புக்கோட்டை தொகுதியில் இருக்கக்கூடிய திருச்சுழியில் ஏற்கெனவே 5 தொழில் கூடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன, அதற்கு தொழில் முனைவோர்கள் யாரும் வரவில்லை என்று கூறியிருக்கின்றார்கள்—அவர்களை என்னுடைய தொகுதியிலே வந்து தொழில் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலும் மற்றும் பக்கத்திலும் உள்ள தொழில் முனைவோர்களை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அணுகி, அவர்களை எல்லாம் இவர்களுடைய தொகுதிக்கு அழைத்து வருவார்களானால் அத்தனைபேர்களுக்கும் அரசு உதவி செய்ய கனிவோடு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 189, திரு. என். ஆர். ராஜேந்திரன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

189—

கூலி விவசாயிகளுக்கான நலத்திட்டம்

***23398—**திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலமற்ற கூலி விவசாயிகளுக்கான நலத்திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எனவே அடுத்த கேள்வி எழாது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறையக் கூலி விவசாயிகள் குறைந்த அறுவடை உள்ள காலங்களில் வேறு மாவட்டங்களுக்குச் சென்று அங்கு கூலிவேலை செய்கிறார்கள். அதைப் போக்குகின்ற வகையிலே, அந்தந்த....... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. முனுசாமி, அமருங்கள், திரு. ராஜேந்திரன் உங்களை ஏற்கெனவே அழைத்தேன். அழைத்த உடனேயே நீங்கள் எழுந்து இருக்க வேண்டும். திரு. ராஜேந்திரன்,

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழை விவசாயிகள், கூலி விவசாயிகளுக்கு, கோடைக் காலங்களில், 6 மாதங்கள் அவர்களுக்கு எந்தவித வேலையும் கிடைப்பதில்லை. சில காலங்களிலே நீர் வரத்து தாமதமாகும் போதும், புயல், மழை வெள்ளம் வரும்போதும் இவர்களுக்கு பணி சரியாகக் கிடைப்பதில்லை. ஆகவே, இவர்களுக்கு வேலை கிடைக்காத காரணத்தினால், நல்ல உணவை இவர்கள் குடும்பம் உண்ண முடியவில்லை. சில காலங்களிலே நோய்வாய்ப்பட்டு இவர்கள் இருக்கும்போது யாரும் ஆதரவு செய்ய இயலாத நிலை உள்ளது. இந்த ஒரு வருடம் ஏழ்மை ஏற்பட்டால், அடுத்த வருடம் அவர்கள் பணி செய்யும் சக்தியை இழந்து, வளர்ந்து வரும் இந்த முன்னேற்றமான இந்தப் போட்டி உலகில் அவர்கள் சக்தியை பயன்படுத்த முடியாமல் இருக்கிறார்கள். கருணை உள்ளத்தோடு நமது தமிழக முதல்வர் அவர்கள் எல்லோருடைய நலனையும் காத்து வருகிறார்கள். எனவே, இவர்களுக்கும் ஏதாவது நலத் திட்டத்தை எதிர்காலத்தில் அறிவிப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேளாண்மைத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எனவே, இந்தத் தொழில் மூலம்தான் அதிகமான நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றன. நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு நேரடியாக நலத் திட்டங்கள் இல்லாமல் போனாலும், மறைமுகமாக விவசாய வேலைகள் அதிகரித்து, வேலை வாய்ப்புகள் அதனால் கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. 1994-95ஆம் ஆண்டில் சாகுபடிக்கு லாயக்கற்ற நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 10,000 எக்டேர் பரப்பளவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி ஆண்டிற்கு 300 மனித நாட்கள் விவசாய வேலைகள் கிடைக்கவும், அதனால் இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தப் பரப்பளவில் 3 இலட்சம் மனித நாட்கள் கூலி வேலைகள் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

1995 ஏப்ரல் 3]

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் விஞ்ஞான வளர்ச்சியை நோக்கியுள்ள இந்தக் காலத்திலே மிக வேகமாக வளர்ந்துகொண்டு, விஞ்ஞானத்தை ஆதரித்து பல புதிய புதிய கருவிகளை அமைச்சரவர்கள் வழங்கி வருகிறார்கள். டிராக்டர் சப்ளை செய்கிறார்கள், கதிர் அடிக்கும் மெஷின்கள் எல்லாம் மானிய விலையில் அதிகமாகக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இது ஒருபுறம் விவசாய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி மூலம் இத்தகைய கருவிகள் வருகின்ற காரணத்தாலே, எங்கள் பகுதியிலே அறுவடை செய்கின்ற காலங்களிலே அறுவடைக் கூலிகளுக்கு 10 நாட்கள்தான் வேலை இருக்கிறது. அவர்கள் இதைச் சொல்லி, இனி வருகின்ற காலங்களில் எப்படி ஆகுமோ என்று தெரியாமல், குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஏழைக் கூலிகளுக்கு வேலைகள் குறைந்துகொண்டு வருகிற காரணத்தாலே ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் அரசு ஆராய்ந்ததற்குப் பின்னாலேதான் ஊரக வளர்ச்சித் துறையிலே இத்திட்டம்—எம்ப்ளாய்மெண்ட் அஷ்ஷுரன்ஸ் ஸ்கீம்—செயல்படுத்தப்படுகிறது. பல லட்சக்கணக்கான நிலமற்ற கூலி விவசாயிகள் இதனால் பயன்பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டமான தர்மபுரி போன்ற மாவட்டங்களில் தோட்டக் கலைத் துறை வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. எனவே, அந்த மாவட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தி, வேலையில்லாத நாட்களில் விவசாயிகளுக்கு அந்த நிலங்களை ஒதுக்கித் தந்தால் மா, கொய்யா போன்ற பழ வகைச் செடிகளைப் பயிரிட்டு, கூட்டு முயற்சியில் மிகப் பெரிய வெற்றியைக் காண முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுபோன்ற நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு கூட்டு முயற்சியில் பண்ணை வைக்க ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாகுபடி இல்லாத தரிசு நிலங்கள் தமிழகத்திலே

இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும். குறிப்பாக, தோட்டக்கலைத் துறை மூலம் பழத் தோட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற கருத்து அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. இந்தக் கொள்கையை வைத்து, எவ்வளவு நிலங்கள் தரிசு நிலங்களாக இருக்கின்றன என்பதை ஆய்வு செய்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு, வருவாய்த் துறையினுடைய இணக்கத்தோடு புதியதொரு திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம். மானியக் கோரிக்கை வரும்போது, அது பற்றித் தெளிவாக பதிலளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.டி. செல்லசாமி.

திரு. ஏ.டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு அரசு கடன் உதவி வழங்கி, விவசாய விளை பொருள்களை வெளி மார்க்கெட்டில் விற்கும் முகவர்களாக நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமற்ற கூலி விவசாயிகள் எந்தத் தொழில் செய்ய முன்வந்தாலும் அவர்களுக்கு அரசு அனுசரணையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிரிடுவதற்கு அல்லது நடவு நடுவதற்கு அல்லது கதிர் அறுப்பதற்கான காலகட்டங்களில் நிலமற்ற விவசாயிகளை அழைக்கின்ற நேரத்திலே, நடவு நடுவதற்கு அல்லது கதிர் அறுப்பதற்கு ஒரு முறை வந்து, மறு முறை வரும்போது அதிகமான கூலி வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, அந்த விவசாயிகளுக்கு குறிப்பிட்ட கூலி நிர்ணயம் செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் **10-35**

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு அடிப்படைக் கூலி நிர்ணயம் செய்வதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆண்டுக்கொரு முறை இரண்டு முறை அமர்ந்து, அனைத்து விவசாயிகளின் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி நிர்ணயம் செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி

கிடைக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அதைவிட இன்னும் அதிகக் கூலிகூட சில இடங்களில் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. து. மூர்த்தி.

திரு.து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நாகை காயிதேமில்லத் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் குறிப்பாக அதிக விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிலமற்ற ஏழைகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலை செய்துவிட்டு, மற்ற நாட்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மிகவும் சிரமப்படும் நிலை இன்றைக்கும் அவர்களுக்கு வருகிறது. எனவே, அவர்கள் பயன்பெறும் வகையில், வேறு எந்தப் பயிரையாவது பயிர்செய்யும் வகையில் திட்டங்களை வகுத்து, அவர்கள் மற்ற நாட்களில் வேலை செய்வதற்கேற்ற வகையில் ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் 6 மாதங்களுக்கு விவசாயப் பணிகள் நடைபெறுகின்றன. மீதி 6 மாதங்களுக்கு நிலங்களைப் பயிரிடாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால், அந்த இரண்டு மாவட்டங்களிலும் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. எனவே, பயிர் செய்யக்கூடிய அந்தப்பருவ காலத்திற்குப் பிறகு மீண்டும் அவர்கள் பயிர் செய்யவேண்டிய நிலையை அரசு உருவாக்க இருக்கிறது. இது நடைமுறைப்படுத்தப் படுகிறபோது எல்லா நாட்களுக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 190, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

190—

ஜெ.ஜெ. 92 அரிசியை ஏற்றுமதி செய்தல்

* **44060—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெ.ஜெ.92 அரிசியை ஏற்றுமதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?